[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 மே 9

வாரியத்தின்மூலம் மந்தைவெளி, மயிலாப்பூர் பகுதிகளிலே கட்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய வீடுகளில், அவர்களுக்கு நிச்சயமாக வீடுகள் ஒதுக்கித் தர அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) மதுரை, கிரானைட் தொழில் மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள். உரையை சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மதுரை மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்காக TVS நிறுவனம், Fenner India, Madura Coats, Thiagarajar Mills, Meenakshi Mills போன்ற பல தொழிற்சாலைகள் உருவாகியிருந்தாலும்கூட, அந்த மாவட்டத்தின் இயற்கை வளர்ச்சிக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் அரசின் வருவாய்க்காகவும் அமைந்தது granite தொழிற்சாலைகள். அந்த granite தொழிற்சாலைகளில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஏறத்தாழ 1 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள். உச்ச நீதிமன்றத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறியதன் அடிப்படையிலும், அதேபோன்று, மத்திய அரசினுடைய Geological Survey of India, National Institute of Rock Mechanics ஆகிய இரண்டும் மேற்கொண்ட Survey-க்களும், A.D. Survey-யும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழுக்களின் அறிக்கைகள் முரண்பாடாக இருந்த காரணத்தினால் அம்மா அரசால் உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அது குறித்து மாவட்ட ஆட்சியர்கள் முடிவெடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு தொழிற்சாலைகள் மதுரை மாவட்டத்தில் அமைப்பதற்கு எத்தனை சலுகைகள் அளிக்கப்பட்டாலும்கூட, அங்கு தொழில்கள் துவங்குவதற்குத் தொழிலதிபர்கள் முன்வருவதில்லை. குறிப்பாக, மேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அது சம்பந்தமாக, மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். இங்கிருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட நாங்கள் இது குறித்து அரசின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறோம். குறிப்பாக மதுரை

2022 மே 9] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

மாவட்டத்தைத் தவிர பிற மாவட்டங்களில் ஏறத்தாழ 18 மாவட்டங்களில் இயற்கையாக இந்தத் தொழில் தடையின்றி நடைபெறுகிறது. அப்பகுதிகளில் தொழில் வளர்ச்சியும் தடையின்றி ஏற்படுகிறது. தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆனால், மதுரை மாவட்டத்தில் மட்டும் நீண்ட காலமாக தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் அரசுக்கு வருவாயும் இல்லாமல் இருக்கிறது. ஏனென்றால், மதுரை என்றால் இட்லி கடைதான் அனைவருக்கும் தெரிகிறது. ஆனால், அந்த Italian Granite மதுரை மாவட்டத்தில்தான் கிடைக்கிறது. உலகப் பிரசித்தி பெற்ற Italian Granite என்று சொல்லக்கூடிய வெள்ளை கிரானைட் என்பது மதுரையில்தான் சிறப்பு வாய்ந்தது. எனவே, அத்தொழிலைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். "ஒரு காரியம் பிடிக்கவில்லையென்றால் ஒன்று Committee போடு, இல்லையெனில் அதன் தலையின்மேல் ஒரு கல்லைப் போடு" என்றார். அந்த கூற்று சரியாக எதற்குப் பொருந்தும் என்றால், இதற்குத்தான் பொருந்தும். நம்முடைய Granite–காக. 2012 ஆம் ஆண்டு அவர்களது ஆட்சியிலிருந்தபோது அங்கு Collector–ஆக இருந்தவர், திரு. சகாயம் அவர்கள். அந்த ஊரில் அங்கிருக்கின்ற Granite quarry–களைப் பற்றி, அங்கு தவறுகள் நடப்பதாக பத்திரிக்கையில் செய்தியை வெளியிட்டார்கள். அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனி அலுவலராகச் சென்று எல்லாவற்றையும் சரி பார்த்தார்கள். 1,13,000 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற ஓர் அறிக்கையை அவர் கொடுத்தார். அவர் அந்த அறிக்கையைக் கொடுத்துவிட்டார்; உடனே அவர் போய்விட்டார். புதிதாக அடுத்த Collector அந்த மாவட்டத்திற்கு வந்தார். திரு. அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் Collector ஆக வந்தார். அவர் என்ன செய்தாரென்றால், அவர் போட்டது சரியில்லை என்று இவர் 18 குழுக்களை நியமித்து, 175 quarry–களைத் தணிக்கை செய்ய வேண்டும் என்றார். திரு. சகாயம், இ.ஆ.ப., அவர்கள் 3 quarry–களைத்தான் தணிக்கை செய்தார்.

இவர் மதுரை மாவட்டத்தில் இருந்த மொத்தம் 173 quarry–களை தணிக்கை செய்யுங்கள் என்றார். தணிக்கை செய்து முடித்தவுடனே, 94 quarry–களில் விதிமீறல் இருப்பதாக அந்தக் குழு சொல்லியது. அதற்கடுத்து, இது சரியில்லை; இந்தக் குழுவும் சரியில்லை என்று சொல்லிவிட்டு, மறுபடியும் 2012 ஆம் ஆண்டில், கனிம வளத் துறை Geologist–களைக் கொண்டு, ஒரு குழு போட்டு, நீங்கள் போய் ஆராய்ந்துவிட்டு வாருங்கள் என்றார்கள். அவர்கள் போய் ஆராய்ந்துவிட்டு வந்தார்கள்; 89 quarry–களை தணிக்கை செய்தார்கள். 89 quarry–களை தணிக்கை செய்ததில், அவர்கள் சொன்னார்கள், இந்த கற்களில் 10 சதவிகிதம் கழிவுபோக, மீதி 90 சதவிகிதம் விற்பனை செய்யப்பட்டதாகக் கூறி, குத்தகைதாரர்களுக்கெல்லாம் ஒரு notice கொடுக்கச் சொன்னார்கள். 96 சதவிகிதம் recovery செய்த குத்தகைதாரர்கள் ஆட்சேபம் தெரிவித்ததால், மீண்டும் பிப்ரவரி 2013-ல் ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழு 92 quarry–களை ஆராய்ந்தது. இந்தக் குழு என்ன சொன்னது என்றால், recovery சதவிகிதம் 4–லிருந்து 90 சதவிகிதம் வரை இருக்கிறது என்று சொன்னது. Geologist–களைக் கொண்ட குழு 10–90 சதவிகிதம் என்றது. இவர்கள் 4–90 சதவிகிதம் என்று சொன்னார்கள். இதற்கிடையில் முதலாவது குழு போட்டவர்கள் கொடுத்த notice-ஐ எதிர்த்து case போட்டார்கள். அவர்கள் High Court போனார்கள். High Court–ல் dismiss செய்துவிட்டார்கள். Supreme Court-ற்குப் போனார்கள். அத்துடன் அது முடிந்துபோனது.

2015 ஆம் ஆண்டில் Supreme Court–ல் என்ன சொன்னார்கள் என்றால், 'The authority shall be assigned that, it would lie between the parties, without being influenced by the Affidavit filed before the High Court or any of the observation made by the High Court, within two months' அதாவது, மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரேரணைகள் மற்றும் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட குறிப்புகளைக் கருத்தில்கொள்ளாமல் ஆராய்ந்து, 2 மாத காலத்திற்குள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு Supreme Court ஆணையிட்டது. Collector–க்கு permission கொடுத்தது Supreme Court. Super Court, ஆணையைச் செயல்படுத்த, மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மறுபடியும் ஓர் உயர்மட்டக் குழு அமைத்தார்கள். அந்தக் குழு 83 quarry–களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தது; அதுவும் அப்படியே நின்று போய்விட்டது. இப்படி,

2022 மே 9] [திரு. துரைமுருகன்]

திரும்ப, திரும்ப ஆராய்ந்து, ஆராய்ந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் ஒரு வல்லுநர் குழு போட வேண்டும் என்று வைத்துவிட்டார்கள். இப்போது என்ன நிலைமை என்று கேட்டீர்களென்றால், quarry*–களை எடுப்பதா, வேண்டாமா என்பதுதான் பிரச்சினை. திரு. டிராபிக் இராமசாமி போட்ட* case *ஒன்று, அதற்குள் நான் போக விரும்பவில்லை. இப்போது, அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களில்,* quarry*–களை எடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதற்காக ஒரு குழு போட்டு உட்கார்ந்து பார்க்கப் போகிறோம்.* Private land*–லும்* quarry*–களை எடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. நாங்கள் அறிவித்தோம்; அறிவித்த பிறகு 4 பேர்தான் வந்திருக்கிறார்கள். ஆகையினால் 4 பேரை வைத்து செய்ய முடியாது. இன்னும் கொஞ்சநாள் பொறுத்து, எல்லோரும் வந்ததற்குப் பிறகு,* E.C.*, எல்லாம் போய்விட்டு வர வேண்டுமென்பதற்காக* wait *செய்கிறோம். எனவே, அழிந்துபோன அந்த கிரானைட் தொழில் கலைஞர் ஆட்சியில் இருந்தபடி தளபதியினுடைய ஆட்சியில் மீண்டும் அதேபோல் செழிக்கும்; வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.*

4. கவன ஈர்ப்பு

திண்டிவனம், ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி கோயில் நிலம், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழு போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் குழு போட்டீர்கள். நாங்கள் குழு போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ரோஷனை, இலுப்பைத் தோப்பு பகுதியில் இராமானுஜர் அறக்கட்டளை சார்பாக,. . .*